# முரசொலி செல்வம் மட்டுமல்ல; தி.மு.க.வின் செல்வமும்தான்!



அப்போது அவரை நான் நேரடியாக சந்தித்திருக்கவில்லை. ஒரு பயணத்தில் இருந்த போது தோழர் ஒருவர் அலைபேசியில் அழைத்து அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாக நியூஸ் 18 தமிழ்நாடு தொலைக்காட்சியில் நடைபெற்ற விவாதத்தில் நான் தெரிவித்த கருத்துக்கள் எனது பேச்சு மொழியிலேயே விவாதம் நடைபெற்ற வடிவத்திலேயே முரசொலியில் வந்திருப்பதாக குறிப்பிட்டார். இபேப்பரை பார்ப்பதற்கு நேரமாகிக் கொண்டிருந்தது. நண்பர் ஒருவர் இதற்கிடையில் அதை படம் எடுத்து அனுப்பியிருந்தார். பிறகு, நாகர்கோவில் சென்று சேர்ந்த பிறகு நான் அதை வாசித்தேன். அதன் பிறகு கலைஞர் தொலைக்காட்சியின் ப. திருமாவேலன் அவர்கள் மூலமாக முரசொலி செல்வம் அவர்கள் அந்த விவாதத்தைக் கேட்டு அப்படியே வெளியிட சொன்னதாக சொன்னார். முரசொலியில் பணிபுரியும் முத்தையா அவர்களோடு ஏற்கனவே அலைபேசி வாயிலாக சிலமுறை பேசியிருக்கிறேன். அவரிடம் செல்வம் அவர்களின் அலைபேசி எண்ணை வாங்கி செய்தி மட்டும் அனுப்பியிருந்தேன். அதன் பிறகு அதேபோன்று சில விவாதங்களை தொகுத்து முரசொலி வெளியிட்டிருந்தது. சில கட்டுரைகளும் கூட தீக்கதிரில் வந்ததை மறுபிரசுரம் செய்திருக்கிறார்கள். கடைசியாக தோழர் சீத்தாராம் யெச்சூரி அவர்கள் மறைவையொட்டி நான் தீக்கதிரில் எழுதியிருந்த புகழஞ்சலி கட்டுரையை முரசொலி மறுபிரசுரம் செய்திருந்தது.

இடையில் அநேகமாக நான்குமுறை அவரோடு பேசியிருப்பேன். பாராட்டோ, விமர்சனமோ அதிகபட்சம் 10 வார்த்தைகளைத் தாண்டி இருந்திருக்காது. நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலுக்கு பிறகு முதலமைச்சரும் தி.மு.க. தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து நன்றி தெரிவிப்பதற்காக சென்றிருந்தோம். அன்று தான் முதலமைச்சரின் இல்லத்தில் முதன் முதலாக அவரை நேரடியாக சந்தித்தேன்.

என்னைப் பார்த்ததும் முதலமைச்சரிடம் திரும்பி என் கட்டுரைகளைப் பாராட்டி நாமும் முரசொலியில் வெளியிட்டிருக்கிறோம் என்று என்னை முதலமைச்சருக்கு அறிமுகப்படுத்தினார். அதற்கு பிறகு அலைபேசியில் கூட நாங்கள் பேசிக் கொண்டதில்லை. நேற்று நாகர்கோவிலில் இருந்த போது முதலமைச்சரின் பதிவை பார்த்து தான் அவரது மறைவை நான் தெரிந்து கொண்டேன். வருத்தம் என்னை தொற்றிக் கொண்டது. ஒருமுறைக்கு மேல் சந்தித்தது இல்லை என்ற போதும் பேசிய தருணங்களில் கூட அவர் 10 வார்த்தைகளுக்கு மேல் பேசியதாக நினைவில்லை என்ற போதும் இனம்புரியாத ஒரு மரியாதை அவர் மீது ஏற்பட்டிருந்தது.

எனவே, அவரை இழந்தது இயல்பாகவே வருத்தத்தை ஏற்படுத்தியது. இன்று அவருக்கு அஞ்சலி செலுத்துவதற்காக சென்றிருந்தேன். கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் ஜி. ராமகிருஷ்ணன், மாநில செயலாளர் தோழர் கே. பாலகிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் தோழர் ஆர். முத்தரசன் ஆகியோர் மரியாதை செலுத்திவிட்டு முதலமைச்சரிடம் பேசிக்கொண்டிருந்தார்கள். நான் வாசலுக்கு வந்துவிட்டேன். எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் பரந்தாமன் அவர்களும், தமிழன் பிரசன்னா அவர்களும் உள்ளே செல்லுமாறு கூறினார்கள்.

நான் இடநெருக்கடியைச் சொல்லி வெளியே செல்ல முயற்சித்த போது தலைவர் கூப்பிடுகிறார் போங்கள் என்றார்கள். நான் திரும்பிய போது முதலமைச்சர் உங்கள் கட்டுரைகளைப் பற்றி அவர் பலமுறை தன்னோடு பேசியிருக்கிறார் என்பதை தெரிவித்தார். ஏராளமான கட்டுரைகளை வெளியிட்ட மனிதன் சில நேரங்களில் என்னை அழைத்து பாராட்டியதே அவருடைய பெருந்தன்மை. அதை முதலமைச்சரிடமும் பகிர்ந்திருக்கிறார் என்று அறிந்த போது நான் நெகிழ்ந்து போனேன்.

எந்தவொரு கட்சிக்கும் பத்திரிகை என்பது மிக, மிக முக்கியமான ஆயுதம், கேடயம். பல நேரங்களில் பத்திரிகைகள் ஒரு செய்தியை பிரசுரிப்பதும், பிரசுரிக்காமல் இருப்பதுமே அரசியல் தாக்கத்தை ஏற்படுத்தி விடும். கட்சியின் தலைவர்களே உணர்ச்சி வேகத்தில் பேசினாலும் பத்திரிகை ஆசிரியர்கள் அதன் தாக்கத்தை கணக்கில் கொண்டு எடிட் செய்கிற அதிகாரம் படைத்தவர்களாக இருக்கிறார்கள்.



**க.கனகராஜ்**
மாநில செயற்குழு உறுப்பினர்,
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி
தமிழ் மாநிலக் குழு

தமிழ்நாட்டின் வரலாற்றில் மிக முக்கியமான தடம் பதித்த ஒரு கட்சியின் அதிகாரப்பூர்வ நாளிதழுக்கு அதன் தலைவருக்கு அடுத்தபடியாக ஆசிரியராக இருப்பது என்பது மகத்தான பெருமை தான்.

ஒரு கட்சியின் உறுப்பினருக்கு அதை விடவும் உயர்ந்த மரியாதை எதுவும் இருந்து விட முடியாது. அந்த மரியாதையை திமுக அவருக்கு வழங்கியிருந்தது. அதற்கு கைமாறு செய்யும் வகையிலும் வலு சேர்க்கும் முறையிலும் சிலந்தி என்கிற பெயரில் அவர் அரசியல் விமர்சன கட்டுரைகளை எழுதி வந்தார். அதை தொடர்ச்சியாக வாசிப்பவர்களுக்கு தி.மு.க.வின் அரசியல் நிலைபாடுகளில் உறுதியாக காலூன்றி தரவுகளோடு கட்சியின் கீழ்மட்ட உறுப்பினர்களுக்கும் புரியும் வகையில் எழுதிவந்தார் என்பதை உணர முடியும்.

அந்த கட்டுரைகளுக்கு நானும் ஒரு ரசிகன். எங்கள் கட்சியை விமர்சித்தும் அவர் எழுதியிருக்கிறார். அந்த கருத்துக்களோடு உடன்படாத போதும் அவர் அந்த கருத்தை முன்வைக்கிற முறை பாராட்டுக்குரியதாகவே இருக்கும். அவரது மறைவு முரசொலிக்கு மட்டுமல்ல; தி.மு.க.வுக்குமே பேரிழப்பு தான். அவர் முரசொலி செல்வம் மட்டும் அல்ல; தி.மு.க.வின் செல்வமும்தான்.

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் சிறப்புரை!

# நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் அறிவிப்பு!

நீலகிரி, அக். 17 -

நீலகிரி மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் இன்று (17.10.2024- வியாழக்கிழமை) காலை 11 மணி அளவில் மாவட்டக் கழக அவை தலைவர் கே.போஜன் தலைமையில், கழக தேர்தல் பணி செயலாளர், அரசு தலைமை கொறடா கா. ராமச்சந்திரன், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் பி.ஆர்.பரமேஸ்குமார் (கூடலூர்), தென்றல் செல்வராஜ் (உதகை) மற்றும் அ.திராவிடமணி



(குன்னூர்) ஆகியோர் முன்னிலையில் மாவட்ட கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.

கழக தலைவர் - தமிழக முதல்வர் அவர்களால் நீலகிரி மாவட்டத்திற்கு பொறுப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நிகழ்ச்சியில் கலந்து சிறப்புரையாற்றுகிறார்.

இதில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்டத்திலுள்ள தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக செயற்குழு-பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர்க் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்க அன்புடன் வேண்டுகிறேன்.

பொருள்: மாவட்டத்தில் கழக பவள விழா தொடர் நிகழ்ச்சிகள் குறித்து.

வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு.

2026 சட்டமன்ற தேர்தலுக்காக பூத் கமிட்டி அமைத்தல்.

கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி ஊராட்சியில், கிருஷ்ணகிரி நகர கூட்டுறவு வங்கி (வரை) எண்.118 சூளகிரி கிளையை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்அர.சக்கரபாணி, மாவட்ட ஆட்சித்தலைவர் கே.எம்.சரயு முன்னிலையில் 14.10.2024 அன்று துவக்கி வைத்து, 5 மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு ரூ.79 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பிலான பல்வேறு கடன் உதவிகளை வழங்கினார். உடன், ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி. முருகன், ஓசூர் மாநகராட்சி மேயர் தஎஸ்.ஏ.சத்யா உள்ளிட்ட பலர் உள்ளனர்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில்

# பள்ளி மாணவர்களிடையே கலைஞரின் கவிதைகள், திரைப்பட, நாடக வசனங்கள் ஒப்புவித்தல் போட்டி!

## மாவட்டக் கழகச் செயலாளர் தே.மதியழகன் துவக்கி வைக்கிறார்!

கிருஷ்ணகிரி, அக். 17-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு இன்று (17.10.2024 வியாழக்கிழமை) காலை 10.30 மணிக்கு, அரசு திருமண மண்டபம் . என்.மோட்டூர், மத்தூரில் நடைபெறவுள்ளது.

மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் அமைப்பாளர் எஸ். எஸ் சங்கர் தலைமை தாங்குகிறார்.

மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் தலைவர் தணிகை ஜி.கருணாநிதி வரவேற்புரையாற்ற, மாவட்ட பொருளாளர் ப.கதிரவன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வி.செந்தில், மத்தூர் வடக்கு ,தெற்கு. ஒன்றிய கழக செயலாளர்கள் குண. வசந்தரசு,கே. ஆர்.கே.நரசிம்மன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் கே.ஆர். கோதண்டன், மாவட்ட துணை தலைவர் ஏ.ராஜசேகர், இந்த அணியின் துணை அமைப்பாளர்கள் எஸ் மோதிலால், எம் ஆனந்தன்,ஆர்.எஸ்.கிரிதர், எஸ். கார்த்திகேயன், ஆர். மோகன், கே.பார்த்திபன், ஆர் சுந்தரராசன், என். சி.சிவகுமார், செ. அரி, எஸ்.அரவிந்தன், கே. ஒ. தேவராஜ், கே.ஜவகர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு. கழக செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. போட்டியை துவக்கி வைத்து பரிசுகள் வழங்கி சிறப்புரை ஆற்றுகிறார்.

இவருடன் மாநில கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் துணை செயலாளரும் மண்டல பொறுப்பாளருமான கே.வி.குப்பம் சி.கோபி கலந்துக் கொள்கிறார்.

சிறப்பு அழைப்பாளர்களாக மாநில அமைப்புச் சாரா ஓட்டுனர் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தி. செங்குட்டுவன், தலைமை கழக சொத்து பாதுகாப்பு செயலாளர், முன்னாள் எம்பி. இ.ஜி.சுகவனம், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மணிமேகலை நாகராஜ், மாநில மகளிரணி ஆலோசனை குழு உறுப்பினர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் காஞ்சனா கமலநாதன், தலைமை தீர்மான குழு உறுப்பினர் முன்னாள் எம்பி. எம்.வி. வெற்றிச் செல்வன், மாநில விவசாய அணி துணை செயலாளர் டேம்.வெங்கடேசன், மாநில மகளிரணி பிரச்சார குழு செயலாளர் டாக்டர். எஸ்.மாலதி நாராயணசாமி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வி.சி. கோவிந்தசாமி, வி.கிருஷ்ணமூர்த்தி, மற்றும் பி.டி.அன்பரசன், கே. வி.எஸ்.சீனிவாசன், ஆகியோரும், மாவட்ட அவைத்தலைவர் எ.நாகராஜ், மாவட்ட துணை செயலாளர்கள், பி.கே. கோவிந்தசாமி, எம்.சந்திரன், சாவித்திரி

கடலரசுமூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜெ.கே. கிருபாகரன், பி.பரிதா நவாப், பொதுகுழு உறுப்பினர்கள் டி. பாலன், ஏ.சி. நாகராசன், என் அஸ்லாம், சித்திரா சந்திரசேகர், நகர செயலாளர் எஸ்.கே. நவாப்,ஒன்றிய கழக செயலாளர்கள்.வி. சாந்தமூர்த்தி, க. மகேந்திரன், சி. சுப்பிரமணி, வி.ஜி.ராஜேந்திரன், டி.செல்வம், எஸ். குமரேசன், எஸ்.ரஜினி செல்வம், பி.கோவிந்தன், டி. தனசேகரன், எம். அறிஞர், பேரூர் கழக செயலாளர்கள் வி.சி. தம்பிதுரை, ஜே.கே.எஸ்.பாபு, பி.சி வெங்கட்டப்பன், பி.பார்த்திபன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, ஊராட்சி பிரதிநிதிகள் கழக மூத்த முன்னோடிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் என, அனைவரும் கலந்துக் கொள்கிறார்கள்.

முடிவில் மாவட்ட திமுக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் துணை செயலாளர் எஸ்.கே ரங்கன் நன்றி கூறுகிறார்.

இந்த நிகழ்வை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அணி ஏற்பாடு செய்துள்ளது.


31 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தஞ்சைப் பெரியார், முன்னாள் அமைச்சர்

மன்னை ப.நாராயணசாமி

அவர்கள்



"எறும்பனையர் எம் மறவர் இன்னனையர் நம் மன்னை"
– பேரறிஞர் அண்ணா

"மன்னை எனது அன்னை"
– முத்தமிழ் அறிஞர் கலைஞர்

............... என்றும் உங்கள் வழியில் பேரன் ...............

மன்னை த.சோழராஜன் B.E.,

நகர்மன்றத் தலைவர் – மன்னார்குடி

( மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் )